உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்
S.C No.689/2023

| | |
|---|---|
| பெயர் | :கலையரசி(அ.சா.10) |
| தகப்பனார் பெயர் | :பெரியழகன் |
| கணவர் பெயர் | :பாண்டியன் |
| வயது | :23 |
| கிராமம் | :துவாராபதி, நத்தம் தாலுகா |
| வட்டம் | :திண்டுக்கல் மாவட்டம் |
| தொழில் | :வீட்டுக்குடித்தனம் |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

10.10.2025

முதல் விசாரணை:

ஆஜர் எதிரிகளில் 1ம் எதிரியை தெரியும், மற்ற 2 எதிரிகளை தெரியாது. செல்வமணி அ.சா.1 என்னுடைய மாமா ஆவார். அவர் என் அம்மாவுடைய தம்பி ஆவார். என் தாயார் பெயர் செல்வி. எந்த வழகக்கு தொடர்பாக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்பது தெரியும். என்னுடைய அக்கா, தாய்மாமனின் 2வது மனைவி மீனாட்சி இறந்துவிட்டார். அவர் பெரியகற்பூரம்பட்டி கிராமத்தில் இறந்துவிட்டார். அதனால் சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்னர் அங்கு பார்ப்பதற்காக சென்றிருந்தோம். அப்போது சுமார் காலை சுமார் 10 மணி இருக்கும். அப்போது காவலர்கள் விசாரித்து கொண்டிருந்தார்கள். மீனாட்சி தற்கொலைசெய்து இறந்துவிட்டதால் காவலர்கள் வந்து விசாரித்து கொண்டிருந்தார்கள். கூட்டமாக இருந்ததால் நான் வீட்டில் இருந்து வெளியே சென்று பார்த்தபோது, எனது மாமா மகனான சிவா, என் தாயார் செல்வி, அந்த ஊர்க்காரர்கள் செல்மணி அ.சா.1ஐ தூக்கி சென்றார்கள். அப்போது கத்தியால் அவர் குத்துப்பட்டதாக கூறினார்கள். ஆஜர் 1வது எதிரி என் மாமா செல்வமணியை கத்தியால் குத்தியதாக சொன்னார்கள். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்ரைல. அதன்பிறகு அ.சா.1 செல்மணியை ஆம்புலன்சில் ஏற்றி சென்றார்கள். அங்கு ஏற்கனவே காவலர்கள் இருந்ததால் காவலர்கள் ஆஜர் எதிரி 1ஐஅழைத்து

சென்றுவிட்டார்கள். காவலர்கள் என்னையும் விசாரித்தார்கள் நடந்தவற்றை கூறினேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

சம்பவம் நடக்கும் போது நான் நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை. செல்வமணிக்கு நான் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக தவறாக சொல்கிறேன் என்றும் நான் சம்பவத்தை பற்றியோ, சம்பவத்தை நேரடியாக பார்த்தோ சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.10.10 18:50:52 +0530

Assistant Sessions Judge

Melur